| | |
|---|---|
| **திருக்குறள் – குறள் எண்.107**<br>**செய்ந்நன்றி அறிதல்**<br>எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்<br>விழுமந் துடைத்தவர் நட்பு. | **பொருள்**<br>தம் துன்பத்தைப் போக்கியவரின் நட்பை ஏழேழு பிறப்பிலும் நல்லவர் எண்ணுவர்... |

## 22.01.2024ம் தேதிய மாநகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள்கள்

### பொருள் எண்.1

கும்பகோணம் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கை (DBC) களப்பணி மேற்கொள்ள பொது சுகாதார துறை மூலம் அறிவுறுத்தப்பட்டு 153 பணியாளர்களுக்கு மூன்று மாத காலம் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண் 669 நாள் 31.07.2023ல் அனுமதி பெறப்பட்டு பொறியியல் பிரிவுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர கோப்பு அனுப்பிவைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.590.00 வீதம் (மாவட்ட ஆட்சியர் தினக்கூலி பணியாளர்களுக்கான தினக்கூலி தொகை) கொண்டு மூன்று மாதங்களுக்கு 153 எண்ணிக்கை பணியாளர்கள் மூலம் பொறியியல் பிரிவு மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.85.00 இலட்சம் (ரூபாய் எண்பத்தைந்து இலட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட மேற்படி பணிக்கு 18.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின் படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஆர்.கே. கம்பெனி, பெரம்பலூர் | **83,95,150/-** | **83,80,517/-** | மதிப்பீட்டை விட **0.17%** குறைவு |
| 2. | மெசர்ஸ். சரம் என்வைரோ சர்வீல் (பி) லிட்., சென்னை. | **83,95,150/-** | **91,78,661/-** | மதிப்பீட்டை விட **9,33 %** அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>** :

1. மதிப்பீட்டைவிட 0.17% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, மெசர்ஸ். ஆர்.கே. கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. திருத்திய மதிப்பீடு 85.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 5869 /2023/எச்1**

---

### பொருள் எண்.2

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கரிக்குளம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 17 MLD Activated Sludge Process method பராமரிப்பு பணிக்கு கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள், இயந்திரக் குழிகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 755 நாள் 29.09.2023ல் ரூ.10.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s. Keyem Infra Project Private Ltd., | **6,15,450./** | **6,14,450/-** | மதிப்பீட்டை விட **0.16% குறைவு** |
| 2. | VVV Construction Pvt., Ltd., Chennai | **6,15,450./** | **12,19,500/-** | மதிப்பீட்டை விட **98.15 % அதிகம்** |

**அலுவலக குறிப்பு** மதிப்பீட்டைவிட 0.16% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, M/s. Keyem Infra Project Private Ltd., நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 9009 /2023/இ4**

---

## பொருள் எண்.3

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் சோழன் நகர், சோலையப்பன் தெரு, வடகுடியான் தெரு, பாணாதுறை, செந்தில்நாதன் நகர், சீனிவாசன் நகர், மாதுளம்பேட்டை மற்றும் நேரு காலனி மின் உந்து நிலையங்கள் (Pumping Stations) ஜான் செல்வராஜ் நகர், எல்.பி.எஸ். ரோடு தூண்டும் நிலையங்கள் (Lifting Stations) , பிரதானக் குழாய்கள் (Pumping Stations), கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் (Sewer Line), இயந்திரக் குழிகள் (Machine holes) 5 மாத காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 754 நாள் 29.09.2023ல் ரூ.99.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | InfraEn India Pvt., Ltd., Bangaluru | **6852300/-** | **68,42,300/-** | மதிப்பீட்டை விட **0.15% குறைவு** |
| 2. | Tracker Software Technology Pvt., Ltd., | **68,52,300/-** | **82,27,650/-** | மதிப்பீட்டை விட **20.07 % அதிகம்** |

**அலுவலக குறிப்பு** மதிப்பீட்டைவிட 0.15% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, InfraEn India Pvt., Ltd., Bangaluru நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்..

**ந.க.எண். 9014 /2023/இ4**

## பொருள் எண்.4

கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 48 சுஜாதா நகர், வார்டு எண் 22 அரவிந்த் நகர், வார்டு எண் 07 பெரிய தம்பி நகர், வார்டு எண் 7 சக்ரா நகர், வார்டு எண் 17 துக்காம்பாளையத் தெரு, வார்டு எண் 46 கம்பன் நகர், வார்டு எண் 5 பெருமாண்டி ஆகிய 7 எண்ணிக்கை தூண்டும் நிலையங்கள் (Lifting Station) பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்756 நாள் 29.09.2023ல் ரூ.12.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s. Keyem Infra Project Private Ltd., | **749850/-** | **748850/-** | மதிப்பீட்டை விட **0.13%** குறைவு |
| 2. | VVV Construction Pvt., Ltd., Chennai | **749850/-** | **13,80,000/-** | மதிப்பீட்டை விட **84.04 %** அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>** மதிப்பீட்டைவிட 0.13% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, M/s. Keyem Infra Project Private Ltd., நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்..

**<u>ந.க.எண். 9016/2023/இ4</u>**

## பொருள் எண்.5

கும்பகோணம் பகுதிகளுக்கு நடைபெற்று வரும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் கழிவு நீர் வாகனங்கள் பழுது சரி செய்யும் பணிக்கு ரூ7,50,000/- (**ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்** மட்டும்) மதிப்பீட்டில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 753 நாள் 29.09.2023-ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு. சபரீசன் சீர்காழி | **735796.08** | **735537.66** | மதிப்பீட்டை விட -0.04% குறைவு |
| 2. | மெசர்ஸ். ப்ளூ மூன் என்டர்பிரைசஸ் | **735796.08** | **769714.00** | மதிப்பீட்டை விட 4.61% அதிகம் |
| 3 | மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்ஸன் | **735796.08** | **737843.38** | மதிப்பீட்டை விட 0.27% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>** மதிப்பீட்டைவிட -0.14% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, திரு. சபரீசன், சீர்காழி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்..

**<u>ந.க.எண். 9016/2023/இ4</u>**

## பொருள் எண்.6

கும்பகோணம் மாநகராட்சிஎல்லைக்குட்பட்ட பாதாள சாக்கடை திட்டப்பணிகளில் அமைக்கப்பட்டு இருக்கும் பிரதான குழாய்களில் (**Pumping Main**) அவ்வப்பொழுது ஏற்படும் அடைப்புகள் (**Blockage**) மற்றும் குழாய் வெடிப்புகளை சரி செய்யும் பணிக்கு ரூ20,00,000/- (ரூபாய் **இருபது இலட்சம்** மட்டும்) மதிப்பீட்டில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி ஆணையரின் நிர்வாக அனுமதி பெற்று **ந.க.எண். 10001** நாள் 04.10.2023 -ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.சரவணன் | **1973967.85** | **1973417.55** | மதிப்பீட்டை விட -0.03% குறைவு |
| 2. | மெசர்ஸ். எ பி பில்டர்ஸ் | **1973967.85** | **1996341.70** | மதிப்பீட்டை விட 1.13% அதிகம் |

**அலுவலக குறிப்பு** மதிப்பீட்டைவிட -0.03% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, திரு.என்.சரவணன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்..

**ந.க.எண். 10001/2023/இ2**

## பொருள் எண்.7

கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18, பொற்றாமரைக் குளம் கீழத் தெருவிலுள்ள பொதுக் கழிப்பிடத்தை பழுதுபார்த்து பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.450000/- (ரூபாய் நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 28.08.2023 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு / அதிகம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கும்பகோணம் | மதிப்பீட்டை விட **0.06%** குறைவு | **4,42,547.79** |
| 2. | திரு.டி.சபரீசன், சீர்காழி | மதிப்பீட்டை விட **1.72%** அதிகம் | **4,50,408.10** |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.06% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 3883/2023/இ1**

## பொருள் எண்.8

கும்பகோணம் மாநகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினி சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் விநியோகம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 29.09.2023 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.ஸ்ரீ கிருஷ்ணா கெமிக்கல்ஸ், பொள்ளாச்சி | ரூ.4000000/- | ரூ.3835000/- | மதிப்பீட்டை விட 4.13 % குறைவு |
| 2 | மெசர்ஸ்.ஸ்ரீ பாலாஜி எண்டர்பிரைசஸ் திருச்சி | ரூ.4000000/- | ரூ.3950000/- | மதிப்பீட்டை விட 1.25 % குறைவு |

**அலுவலக குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 4.13% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, மெசர்ஸ்.ஸ்ரீ கிருஷ்ணா கெமிக்கல்ஸ் பொள்ளாச்சி என்பவரது ஒப்பந்தப் புள்ளியையினை மாமன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 3955/2023/இ1**

---

## பொருள் எண்.9

இம்மாநகராட்சியின் பகுதியில் பொது சுகாதாரத்தை பேணிகாத்திடும் பொருட்டு, நகர் புறங்களில் டெங்கு கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக (Dengue breeding Checking-DBC)களப்பணியாளர்கள் அனுப்பும் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், நகர்புறத்தில் மழை தொடர்ந்து பொழிந்து வருவதால், கொசு உற்பத்தி பெருமளவில் பொது மக்களுக்கு காய்ச்சலை ஏற்படுத்துவதால், அவசர அவசியம் கருதி மேற்படி பணியை மேற்கொள்ள களபணியாளர்கள் தேவைப்படுவதால், தொடர்ந்து டெங்கு கொசு உற்பத்தி அதிகமாகி டெங்கு காய்ச்சல் பரவுவதாலும் அவசர அவசியம் கருதி இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை வெளிக்கொணர்வு முகமையான சரம் எண் விரோ சர்வீஸ்(பி)லிட்., சென்னை நிறுவனத்தின் சம்மத கடிதத்தின் படி **22.09.2023** முதல் **30.09.2023** முடிய **48** பணியாளர் கொண்டும், **01.10.2023** முதல் பொது சுகாதார துறையில் கணக்கீட்டின் படி **153** பணியாளர்களை கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை முடியும் காலம் வரை,பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : (அ) நகர்புறத்தில் பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், அவசர அவசியத்தைக் கருதியும், பொது சுகாதாரத்தை பேணிக்காத்திட நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.
(ஆ) உத்தேச செலவினம் ரூ.65.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.
(இ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 10586 /2023/எச்1**

**பொருள் எண்.10**

கும்பகோணம் மாநகராட்சி குடிதாங்கி தலைமை நீரேற்று நிலைய பழைய மற்றும் புதிய கேணிகளை பராமரிக்கும் பணிக்கு ரூ.4650000/- (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி ஆணையரின் நிர்வாக அனுமதி பெற்று **ந.க.எண்.745** நாள் 29.09.2023-ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 27.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.சரவணன் | **4564251.12** | **4562021.93** | மதிப்பீட்டை விட -0.05% குறைவு |
| 2. | மெசர்ஸ். ஏ பி பில்டர்ஸ் | **4564251.12** | **4794560.66** | மதிப்பீட்டை விட 5.05% அதிகம் |

**அலுவலக குறிப்பு** மதிப்பீட்டைவிட -0.05% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **திரு.என்.சரவணன், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 8199 /2023/இ1**

---

**பொருள் எண்.11**

கும்பகோணம் மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் தாராசுரத்தில் விடுபட்ட பகுதிகள் மற்றும் சில பகுதிகளில் புதிதாக குடிநீர்க்குழாய் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) அனுமதியும் மற்றும் அப்பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 11699/2023/இ1**

---

**பொருள் எண்.12**

கும்பகோணம் மாநகராட்சி உட்பட்ட நமக்கு நாமே திட்டம் - 2021-22 ன் கீழ் புதிய பேருந்து நிலையம் அருகில் வார்டு எண் 24 T.S NO:800, Block no:12 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள (லக்கி சில்க் அருகில்) நடைபாதை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் அருகே காலியாகஉள்ள இடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.32.00 இலட்சம் (ரூபாய் முப்பத்திரெண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 11750/2023/இ1**

---

**பொருள் எண்.13**

கும்பகோணம் மாநகராட்சி பகுதிகளுக்கு குடிதாங்கி நீரேற்று நிலையத்திலிருந்து வலையப்பேட்டை நீருந்து நிலையம் வழியாக கும்பகோணம் மற்றும் தாராசுரம் பகுதிகளுக்கு நீர்த்தேக்க தொட்டிகளின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் வலையப்பேட்டை கட்டிடம் மற்றும் நடைபாதை கைப்பிடிகள் மற்றும் தடுப்பு கம்பிகள் அனைத்து பழுதடைந்த நிலையில் உள்ளதால், அதனை சரிசெய்து புதியதாக கைப்பிடிகள் மற்றும் தடுப்பு கம்பிகள் அமைத்திடவும், பழுதடைந்த கட்டிடத்தை சீர்செய்யும் பணிக்கு ரூ.13,00,000/– (ரூபாய் பதிமூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி ஆணையரின் நிர்வாக அனுமதி பெற்று ந.க.எண். **742** நாள் 29.09.2023 –ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 27.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | **திரு.ஆர்.அசோக் குமார்** | 1268288.90 | 1268055.18 | **மதிப்பீட்டை விட –0.02% குறைவு** |
| 2. | **திரு.கே.மணிக் கண்ணன்** | 1268288.90 | 1293686.11 | **மதிப்பீட்டை விட 2.00% அதிகம்** |

**அலுவலக குறிப்பு** மதிப்பீட்டைவிட –0.02% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **திரு.ஆர். அசோக்குமார், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 8196/2023/இ1**

---

**பொருள் எண்.14**

இம்மாநகராட்சியின் அலுவலர்களுக்கான அலுவலக பயன்பாட்டு வாகனம் TN49AX2908,TN49AX2923 பொலிரோ ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு, சுமார் **15–**ஆண்டுகளுக்கு மேல் ஆவதாலும் சுமார் **2.50** இலட்சம் கிலோ மீட்டருக்கு மேல் வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும் வாகனத்தின் பழுதுகள் அதிகமாக அடிக்கடி ஏற்படுவதால் பழுது பார்க்கும் செலவினம் பெருமளவில் ஏற்படுவதினை கருத்தில் கொண்டு மேற்கண்ட இரண்டு வாகனத்தை கழிவு செய்யவும், இதனால் இரண்டு வாகனங்கள் கழிவு செய்யப்படுவதாலும் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய அலுவலர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான **3** எண்ணிக்கை (Mahindra & Mahindra) Bolero B-6 (OPT) பொலிரோ வாகனம் வாங்கவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.**45,00,000/–**ரூபாய் (நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** (அ) அனுமதி அளிக்கலாம்.
(ஆ)செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 10885/2023/இ1**

---

**பொருள் எண்.15**

கும்பகோணம் மாநகராட்சி உட்பட்ட வார்டு எண் 45, காளியாப்பிள்ளை தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை குறுக்கே செல்லும் பழுதடைந்த சிறுபாலத்தினை சீரமைக்கும் பணிக்கு ரூ.16,00,000/- (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண் **793** நாள் 20.10.2023 -ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 27.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஏ. பி பில்டர்ஸ் | **1553479.51** | **1553170.99** | மதிப்பீட்டை விட -0.02% குறைவு |
| 2. | திரு.சரவணன் | **1553479.51** | **1555765.10** | மதிப்பீட்டை விட 0.15% அதிகம் |

**அலுவலக குறிப்பு** மதிப்பீட்டைவிட -0.02% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **மெசர்ஸ். ஏ.பி., பில்டர்ஸ், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 8826/2023/இ1**

**பொருள் எண்.16**

கும்பகோணம் மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர்த் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24ன் கீழ் வார்டு எண் 22 செக்காங்கன்னி மெயின் சாலையில் மினி வாட்டர் டேங்க் அமைத்தல் பணியினை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5004/2023/அ2, நாள் 02.11.2023ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே. மணிக்கண்ணன், கும்பகோணம் | **3,85,422.45** | **3,85,348.56** | மதிப்பீட்டை விட **0.02%** குறைவு |
| 2. | ஆர். அசோக்குமார் | **3,85,422.45** | **4,14,947.00** | மதிப்பீட்டை விட **7.66%** அதிகம் |

அலுவலக குறிப்பு: மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **திரு.கே.மணிக்கண்ணன், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க. எண் 10668/2023/E2**

## பொருள் எண்.17

கும்பகோணம் மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர்த் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24ன் கீழ் 36வது வார்டு ஆற்றங்கரை தெருவில் உள்ள ஆற்றுப் படித்துறை அருகில் மினி வாட்டர் டேங்க் அமைத்தல் பணியினை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5004/2023/அ2, நாள் 02.11.2023ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செல்வா கன்ஸ்ட்ரக்ஷன், கும்பகோணம் | **4,88,445.25** | **4,88,108.77** | மதிப்பீட்டை விட **0.07%** குறைவு |
| 2. | டி. சபரீசன், சீர்காழி | **4,88,445.25** | **4,90,951.68** | மதிப்பீட்டை விட **0.51%** அதிகம் |

அலுவலக குறிப்பு: மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **மெசர்ஸ். செல்வா கன்ஸ்ட்ரக்ஷன், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க. எண் 10668/2023/E2**

---

## பொருள் எண்.18

கும்பகோணம் மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர்த் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24ன் கீழ் கல்லூரி சாலையில் ஹவுசிங் யூனிட் அருகில் பயணியர் நிழற்குடை கட்டுதல் பணியினை ரூ.4.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5004/2023/அ2, நாள் 02.11.2023ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே. மணிக்கண்ணன், கும்பகோணம் | **4,42,471.89** | **4,42,213.61** | மதிப்பீட்டை விட **0.06%** குறைவு |
| 2. | ஆர். அசோக்குமார், கும்பகோணம் | **4,42,471.89** | **4,53,391,40** | மதிப்பீட்டை விட **2.47%** அதிகம் |

அலுவலக குறிப்பு: மதிப்பீட்டைவிட 0.06% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **திரு.கே.மணிக்கண்ணன், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க. எண் 10668/2023/E2**

**பொருள் எண்.19**

கும்பகோணம் மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர்த் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–24ன் கீழ் 3வது வார்டு காளியம்மன் கோவில் தெருவில் மினி வாட்டர் டேங்க் அமைத்தல் பணியினை ரூ.4.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5004/2023/அ2, நாள் 02.11.2023ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே. மணிக்கண்ணன், கும்பகோணம் | **4,05,646.34** | **4,05,554.84** | மதிப்பீட்டை விட **0.02%** குறைவு |
| 2. | ஆர். அசோக்குமார், கும்பகோணம் | **4,05,646.34** | **4,36,836.00** | மதிப்பீட்டை விட **7.69%** அதிகம் |

அலுவலக குறிப்பு: மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள, **திரு.கே.மணிக்கண்ணன், கும்பகோணம்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க. எண் 10668–4/2023/E2**

---

**மேயர்**

**கும்பகோணம் மாமன்றம்**